بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 10/7/2020 அன்று இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

ஹஸ்ரத் சஅது பின் முஆஸ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَ رَسُوْلُهٗ۔

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَ لَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

கடந்த குத்பாவில் கூறப்பட்டது போன்று, அஹ்ஸாப் போருக்குப் பிறகு பனூ குரைஸாவினுடைய துரோகத்தின் தண்டனை குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவனுடைய கட்டளை வந்தது. எனவே அவர்களுடன் போர் நடந்தது. பிறகு பனூ குரைஸா போரை நிறுத்தி ஹஸ்ரத் சஅது அவர்களின் மூலமாக தீர்ப்பு வழங்கப்படுவதற்கு விருப்பம் தெரிவித்தார்கள். ஆகவே சஅது அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். இந்த போரைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:

அஹ்ஸாப் போருக்கு 20 நாட்களுக்குப் பிறகு முஸ்லிம்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ஆனால் பனூ குரைஸாவினுடைய விவகாரம் தீர்வு காணப்பட வேண்டியது இருந்தது. கண்டும் காணாமல் விட்டுவிடக்கூடிய அளவுக்கு அவர்களுடைய துரோகம் இருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பி வந்த உடனேயே தமது சஹாபாக்களைப் பார்த்து வீடுகளில் ஓய்வெடுக்க வேண்டாம். மாறாக மாலை நேரத்திற்கு முன்பே பனூ குரைஸாவினுடைய கோட்டைகளை நோக்கி வந்து விடுங்கள் என்று கூறினார்கள். ஆனால் யூதர்களோ கோட்டை வாயிலை அடைத்துவிட்டு உள்ளே இருந்தார்கள். மேலும் முஸ்லிம்களுடன் சண்டையிட துவங்கினர். எந்த அளவுக்கு என்றால், அவர்களின் பெண்கள் கூட சண்டையில் கலந்து கொண்டனர்.

சில நாள் முற்றுகைக்குப் பிறகு, நீண்ட காலம் எதிர்த்து நிற்க முடியாது என யூதர்கள் உணர்ந்து கொண்டனர். அப்பொழுது அவர்களின் தலைவர்கள் ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் தங்களுடைய நண்பரும் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவருமான அபூ லுபாபா அன்சாரியுடன் தாங்கள் ஆலோசனை செய்யும் பொருட்டு அவரை தங்களிடத்தில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூ லுபாபாவை அனுப்பி வைத்தார்கள். அவரிடத்தில் யூதர்கள் ஆலோசனை கேட்டார்கள். தீர்ப்பை என்னிடத்தில் விட்டுவிட்டு ஆயுதங்களை கீழே போடும்படி ஹஸ்ரத் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்களே அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவா? என ஆலோசனை கேட்டார்கள். அபூ லுபாபா அவர்கள் நாவினால் ஆம் என்று பதில் அளித்தார்கள். ஆனால் கொல்லப்படுவதைப் போன்று தமது கைகளால் தலையை சீவிக் காட்டினார்கள்.

ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்பொழுது வரை தமது முடிவை யாரிடமும் வெளிப்படுத்தவில்லை. ஆனால் அபூ லுபாபா அவர்கள் தமது உள்ளத்தில் என்ன நினைத்தார்கள் என்றால் யூதர்கள் செய்த இவ்வாறான குற்றத்திற்கு மரண

தண்டனையை தவிர வேறு என்ன தண்டனை இருக்க முடியும்! என நினைத்தவாறு சிந்திக்காமல் சைகை மூலமாக அவர்களுக்கு ஒரு விஷயத்தை கூறிவிட்டார்கள். இதுவே பனூ குரைஸா கோத்திரத்தின் அழிவுக்கு காரணமாகிவிட்டது. ஆகவே யூதர்கள் நாங்கள் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என கூறி விட்டார்கள். அவர்கள் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டிருந்தால் அவர்களுக்கு அதிகபட்ச தண்டனையாக யூதர்களின் பிற கோத்திரங்களைப் போன்று அவர்கள் மதீனாவை விட்டு நாடு கடத்தப்பட்டிருப்பார்கள். ஆனால் அவர்களின் துரதிர்ஷ்டம் என்னவென்றால், அவர்கள் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லை. மாறாக எங்களது நட்புக் கோத்திரமான அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர் சஅது பின் முஆஸ் அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வோம். அவர்கள் என்ன தீர்ப்பு கொடுக்கிறார்களோ அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் எனக் கூறினார்கள்.

ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார்கள். சஅது அவர்கள் யூதர்களின் கோட்டையை அடைந்த போது அங்கு பனூ குரைஸா கோட்டையின் மதிலில் நின்று கொண்டு சஅது அவர்களின் வருகைக்காக காத்துக் கொண்டிருந்தனர். இன்னொருபுறம் முஸ்லிம்கள் அமர்ந்திருந்தனர். முதலில் சஅது அவர்கள் தமது சமுதாயத்திடம், நான் கூறக்கூடிய தீர்ப்பை நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வீர்களா? இதற்காக நீங்கள் வாக்குறுதி தருகிறீர்களா? எனக் கேட்டார்கள். அவர்கள், ஆம்! என கூறினார்கள். பிறகு சஅது அவர்கள் பனூ குரைஸாவிடம், நான் கூறக்கூடிய தீர்ப்பை நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வீர்களா? இதற்காக நீங்கள் வாக்குறுதி தருகிறீர்களா? எனக் கேட்டார்கள். அவர்களும், ஆம்! எனக் கூறினார்கள். பிறகு வெட்கி தலைகுனிந்தவாறு இன்னொரு பக்கம் பார்த்தவாறு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இருந்த திசையை சுட்டிக் காட்டியவாறு இங்கு இருக்கக் கூடிய மக்களும் வாக்குறுதி தருகிறீர்களா? எனக் கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆம்! எனக் கூறினார்கள். மூன்று பேரிடமும் வாக்குறுதி வாங்கிய பிறகு சஅது அவர்கள், பைபிளின் கட்டளைக்கேற்ப இந்த தீர்ப்பை வழங்கினார்கள். பைபிளில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

“நீங்கள் ஒரு நகரத்தைத் தாக்கச் செல்லும்போது, முதலில் அந்த நகர ஜனங்களுக்கு சமாதானம் கூற வேண்டும். அவர்கள் உங்கள் சமாதானத்தை ஏற்றுக் கொண்டால், அவர்களது வாசல்களைத் திறந்திடுவார்கள். பின், அந்நகரத்தின் எல்லா ஜனங்களும் உங்களது அடிமைகளாகி விடுவதுடன், உங்களுக்காக ஊழியம் செய்ய முன் வருவார்கள். ஆனால், அந்த நகரத்து ஜனங்கள் உங்களோடு சமாதானம் செய்ய மறுத்து உங்களை எதிர்த்து சண்டையிட்டால், நீங்கள் அந்த நகரத்தை முற்றுகையிடுங்கள். உங்கள் தேவனாகிய கர்த்தர் அந்நகரை கைப்பற்ற உங்களை அனுமதிக்கும் போது, நீங்கள் அங்குள்ள ஆண்கள் அனைவரையும் கொல்ல வேண்டும். ஆனால் நீங்கள் அங்குள்ள பெண்கள், குழந்தைகள், மாடுகள் ஆகியவற்றைக் கொல்லாமல் உங்களுக்காக அந்நகரிலுள்ள எல்லாப் பொருட்களையும் எடுத்து அனுபவிப்பீர்களாக. இந்த எல்லாப் பொருட்களையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்காகவே இவற்றையெல்லாம் கொடுத்துள்ளார்.”

ஹஸ்ரத் சஅது அவர்கள் பைபிளின் இந்த சொற்களைப் படித்தார்கள். மேலும் இதற்கு ஏற்ப தீர்ப்பு கொடுத்தார்கள்.

சஅது அவர்கள் பனூ குரைஸாவின் கூட்டாளியாக இருந்தார். மேலும் அவர்களின் நண்பர்களுள் ஒருவராக இருந்தார். **நிச்சயமாக யூதர்களின் உயிரை பாதுகாக்கக்கூடிய இஸ்லாமிய ஷரீஅத்துக்கேற்ப ஹஸ்ரத் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின்**

தீர்ப்பை யூதர்கள் ஏற்க மறுத்த போது, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் உபாகமம் அதிகாரத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்களுக்காக ஏற்கனவே விட்டுச் சென்ற அதே தீர்ப்பை யூதர்களுக்காக கூறினார்கள். மேலும் இந்த தீர்ப்பிற்கான பொறுப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதோ, முஸ்லிம்கள் மீதோ கிடையாது. மாறாக இது அவர்களின் வேதத்திற்கேற்ப கொடுக்கப்பட்ட தீர்ப்பாகும். மூஸா (அலை) அவர்களின் மீதும், தவ்ராத்தின் மீதும், ஆயிரக்கணக்கான வருடங்களாக பிற சமுதாயங்களுடன் இவ்வாறு நடந்து கொள்ளும் அந்த யூதர்களின் மீதும் இதன் பொறுப்பு விழுகிறது. ஹஸ்ரத் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கருணைக்காக அவர்களை அழைத்தபோது அவர்கள் மறுத்து விட்டார்கள். ஹஸ்ரத் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பேச்சைக் கேட்பதற்கு நாங்கள் ஆயத்தமாக இல்லை எனக்கூறி விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொடுமையிழைத்துவிட்டார் என இன்று கிறிஸ்தவ உலகம் கூச்சலிடுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்ற ஏதேனும் சம்பவத்தில் ஏன் அநீதி இழைக்கவில்லை என கிறிஸ்தவ எழுத்தாளர்கள் ஏன் பார்ப்பதில்லை? மற்ற தருணங்களில் அநீதி ஒன்றும் தென்படுவதில்லை. நூற்றுக்கணக்கான முறை எதிரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருணையால் தன்னை விடுவித்துக் கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு முறையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களை மன்னித்து விட்டுள்ளார்கள். யாராவது அநீதியிழைத்திருப்பார் என்றால், யூதர்களே தம் மீது அநீதியிழைத்துக் கொண்டனர் எனக் கூற வேண்டும். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டனர்.

இது குறித்து மேலும் விளக்கத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் விளக்கியுள்ளார்கள். அதில் கூறப்பட்டுள்ள சில விஷயங்களை நான் இங்கு கூறுகிறேன். அவர்கள் எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஅது பின் முஆஸ் அவர்களின் இந்த தீர்ப்பைக் கேட்டவுடன், உங்களுடைய இந்த தீர்ப்பு இறை நியதியாகும். இது நீங்காது எனக் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்,

قَدْ حَكَمْتَ بِحُكْمِ اللّٰهِ என்று கூறினார்கள். அதாவது, சஅதே! உமது இந்த தீர்ப்பு இறை நியதியாக தெரிகிறது. இதை மாற்றுவதற்கு யாருக்கும் ஆற்றலில்லை என்றார்கள்.

அநேகமாக இந்த தருணத்தில்தான் அன்னார் ஏக்கத்துடன், யூதர்களுள் செல்வாக்குள்ள 10 நபர்களாவது என் மீது நம்பிக்கை கொண்டிருந்தால் இந்த முழு சமுதாயமும் என் மீது நம்பிக்கை கொண்டிருக்கும். மேலும் இறை தண்டனையிலிருந்து தப்பியிருக்கும் என நான் இறைவன் மீது எதிர்பார்ப்பு கொண்டிருப்பேன் எனக் கூறினார்கள்.

பனூ குரைஸாவின் சம்பவம் குறித்து சில முஸ்லிமல்லாத வரலாற்று ஆசிரியர்கள் விரும்பத்தகாத வழிமுறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கெதிராக தாக்குதல் தொடுத்து வருகிறார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இந்த குற்றச்சாட்டிற்கு பதிலளித்தவாறு எழுதுகிறார்கள்:

1. பனூ குரைஸாவைக் குறித்து வழங்கப்பட தீர்ப்பு கொடூரமானது என்று கூறப்படுகிறது. அது சஅது பின் முஆஸ் அவர்களின் தீர்ப்பாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பு ஒருபோதும் கிடையாது.

2. சூழ்நிலையின் அடிப்படையில் பார்க்கும் போது இந்த தீர்ப்பு தவறான தீர்ப்போ, கொடூரமான தீர்ப்போ கிடையாது.

3. சஅது அவர்கள் தீர்ப்பை அறிவிப்பதற்கு முன்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் உறுதிமொழி வாங்கிக் கொண்டார்கள். ஆகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த தீர்ப்பின்படி செயல்பட கட்டுப்பட்டிருந்தார்கள்.

4. தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகள் இந்த தீர்ப்பை ஏற்றுக் கொண்டனர். அதில் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை. அதை இறை நியதியாக கருதினர்.

தீர்ப்பு நடைமுறைப் படுத்தப்படும் வரை இம்மக்கள் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்கள் தங்குவதற்கும் உண்பதற்கும் மிகச் சிறந்த ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். ஒரு குற்றவாளிக்கு மரண தண்டனை கொடுக்கப்படும் போது இன்னொரு குற்றவாளி முன்னால் இருக்காதவாறு பார்த்துக் கொள்ளும்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

இது தவிர எவரைக் குறித்து கருணை மனு வேண்டப்பட்டாலும் அன்னார் உடனடியாக அதை ஏற்றுக் கொண்டார்கள். அந்நபருடைய உயிரை மட்டும் மன்னித்து விடவில்லை. மாறாக அவர்களுடைய மனைவி மக்கள் மற்றும் செல்வத்தையும் திரும்ப ஒப்படைக்கும்படி கட்டளையிட்டார்கள். இதைவிட ஒரு குற்றவாளியுடன் கருணையுடனும் பரிவுடனும் எவ்வாறு நடந்து கொள்வது? **பனூ குரைஸா சம்பவத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது ஒருபோதும் ஆட்சேபனை வர முடியாது என்பதுடன் இந்த சம்பவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த ஒழுக்கம், சிறந்த நிர்வாகத் திறன் மற்றும் அன்னாரின் இயல்பான கருணை, கிருபை ஆகியவற்றிற்கான தெளிவான ஒரு சான்றாகும்.**

இஸ்லாத்தின் அனுதாபிகளைச் சாராத மார்குலிஸ் போன்ற வரலாற்றாசிரியர்கள் கூட சஅது அவர்களின் தீர்ப்பு சூழ்நிலையின் நிர்பந்தத்தினால் ஏற்பட்ட நிகழ்வாகும்; இதைத்தவிர வேறு வழியில்லை என இத்தீர்ப்பை ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆரம்ப காலத்தில் யூதர்களுக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் பல்வேறு நிபந்தனைகள் வகுக்கப்பட்டன. அதில் ஒரு நிபந்தனை என்னவென்றால், யூதர்களைக் குறித்து ஏதேனும் தீர்ப்பு வழங்க வேண்டும் என்றால், அவர்களின் வேதத்தின் அடிப்படையில் தீர்ப்பளிக்க வேண்டும் என்பதாகும். வரலாற்றிலிருந்து நாம் அறிவது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் யூதர்களின் விஷயத்தில் மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்திற்கேற்ப தீர்ப்பு வழங்கி வந்தார்கள்.

பனூ குரைஸா விவகாரத்தில் சஅது பின் முஆஸ் அவர்களுக்கு எந்த அளவுக்கு தொடர்பிருந்ததோ அது பற்றிய விளக்கம் இந்த அளவுக்கு இங்கு போதுமானது. ஹஸ்ரத் சஅது பின் முஆஸ் அவர்களைப் பற்றிய இன்னும் சில விபரங்கள் எஞ்சியுள்ளன. அதை இனி வரும் காலத்தில் எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கடந்த நாட்களில் வஃபாத்தான மதிப்பிற்குரிய ஹாஜியா ருகைய்யா காலிது சாஹிபா, மதிப்பிற்குரிய சஃபியா பேகம் சாஹிபா, மதிப்பிற்குரிய அலி அஹ்மது சாஹிப், மதிப்பிற்குரிய ரஃபீகா பிபி சாஹிபா அவர்களைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். இவர்களுடன் கடந்த காலங்களில் ஊரடங்கின் போது ஜனாஸா தொழுகை தொழ வைக்க முடியாதவர்களையும் இணைத்துக் கொண்டார்கள்.

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)